1993 டிசம்பர் 31]

அவ்வளவு பெரிய அளவில் அவசியம் இல்லை. எங்கெங்கே ஜெனரேட்டர்கள் தேவைப்படுகிறதோ அதையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறோம். எனவே தேவையான அளவுக்கு அந்த நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். எனவே இருட்டடிப்பில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது இருட்டடிப்பில் குழந்தைகள் பெறும்போது குழந்தைகள் ஊனமுற்று விடுகின்றன என்று சொன்னார்களேயொழிய அப்படி அல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. அப்படி எல்லாம் இருந்திருந்தால் நான் பிறக்கிற நேரத்திலே எங்கள் ஊரிலே கரன்ட் கிடையாது. அவர் சொல்வதுபோல் என்றால் நாங்கள் எல்லாம் ஊனமாகத்தான் பிறந்திருப்போம். அப்படி அல்ல சூழ்நிலை. ஆனால் மின்சாரத் தேவை என்பது அவசியம். அது இல்லாத நேரத்தில் மற்ற வழிகளை அவர்கள் செய்துகொள்கிறார்கள். இதைப் பார்த்து யாரும் பயந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகச் சொன்னதற்குக் காரணம் இந்த வசதிகளை எல்லாம் எப்படியாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்ற ஆர்வத்தில்தான் அவ்வாறு கூறினார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்து அதற்கான நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 104. திரு. கே. தவசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

104--

ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் போதியளவு மருத்துவர்களையும் ஊழியர்களையும் நியமித்தல்.

21194-

திரு.கே. தவசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு போதிய அளவு மருத்துவர்களையும் ஊழியர்களையும் நியமித்து முழுமையான அரசு மருத்துவமனையாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் தேவையான அளவுக்கு பணியிடங்களைத் தற்போது ஏற்படுத்தியுள்ளோம்.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் புரட்சித் தலைவியினுடைய எண்ணங்கள் எல்லாம் நிறைவேறுகிற வகையில் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவ்வாறு செய்துகொடுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த ஆண்டிலாவது இது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பேராமெடிக்கல் ஸ்டாப் தேவையான அளவுக்கு அங்கே இடங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால் இருக்கிற சங்கடம் என்னவென்றால் நமக்கு இருக்கிற நிதிப்பிரச்சினை காரணமாக, வேறிடத்தில், அதாவது அதிகமாக எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மாற்றி அந்த இடத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே வெகு விரைவாகவே காலியிருக்கிற இடங்களை நிரப்பி மருத்துவமனைக்கு வேண்டிய முழு வசதிகளையும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 105, திரு. என். ஆர். ராஜேந்திரன்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

105--

காட்டுமன்னார் கோயிலிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு பேருந்து வசதி அளித்தல்.

***20000- திரு. என்.ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காட்டுமன்னார் கோயிலிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும்?